# புதியவிமானங்களைகொள்வனவுசெய்வதற்கான படையினரின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு!

(கொழும்பு)
விமானப்படைக்கென ஆறு 'சி-130ரக ஹேர்குலிஸ்' விமானங்களை கொள்வனவு செய்யுமாறு விமானப்படையினர் விடுத்த அவசரவேண்டுகோளை அரசு நிராகரித்துள்ளது யுத்த முனைகளுக்கு படை

[6ம் பக்கம் பார்க்க]


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 31 இதழ் 186
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 — 08 — 1992


## புலிகளுடன் அரசு உடன் பேசவேண்டும்
### - பிரிட்டிஷ் தூதுவர்

(கொழும்பு)
'அரசு இனப்பிரச்னைக்குச் சமாதானத்தீர்வு காண விரும் பினால் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்று பிரிட்டிஷ் தூதுவர் எட்வேர்ட் ஹோரண்ட் பீல்ட் தெரிவித்

[6ம் பக்கம் பார்க்க]

## பிரபாவை ஒப்படைக்குமாறு இந்தியா இன்னும் கோரவில்லை

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ இரத்மலானை ரயில்வே ஊழியர்களின்
# 48 லட்சம் ரூபா சம்பளப்பணம்
# ஆயுதக் கும்பலினால் கொள்ளை

### பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் பலி!; ஐவர் படுகாயம்!!

(கொழும்பு)
இரத்மலானை ரயில்வே தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளப்பணம் 48 லட்சம் ரூபா நேற்றுக்காலை இனந்தெரியாத ஆயுதக் கும்பல் ஒன்றினால் கொள்ளையடிக்கப்பட்டது. துப்பாக்கிகள் சகிதம்வந்த இந்தக் கும்பல் மேற்படி தொழிற்சாலைக்கு முன் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இந்தப்பணத்தைக் கொள்ளையடித்ததாகவும், இதில் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டதாகவும், ஐவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரத்மலானை ரயில்வே தொழிற்சாலை பொறியியல் பகுதியினரின் சம்பளப் பணமே நேற்று கொள்ளையடிக்கப்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

## ஷெல்துப்பாக்கிதாக்குதலில் இரு பெண்கள் காயம்

(யாழ்ப்பாணம்)
பலாலி, தெல்லிப்பளைப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் துப்பாக்கித் தாக்குதல்களினால் நேற்று இரு பெணகள் படுகாயமடைந்தனர்.

நேறறுக்காலை 10-45மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் ஏழாலை கிழக்குப்பகுதிகளில் விழுந்து வெடித்ததில் ஒரு பெண்ணும், தெல்லிப்பழை பகுதியிலிருந்து இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருபெண்ணும் படுகாயமடைந்த நிலையில், யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)
அரசசேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 7-ம் திகதியிலிருந்து 31-ம் திகதி வரை நீடிககபபட்டுள்ளது.

பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தகவல்துறை சிரேஷ்ட உதவிச் செயலாளர் இத்தகவலை தெரிவித்துள்ளார். (ரி)

## யாழ். நகரில் ஷெல் விழுந்து இளம்பெண் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதி முகாம்களிலிருந்து யாழ்நகர் குடியிருப்புப்பகுதியை நோக்கி படையினர் நேற்று இரவு 8-45 மணியிலிருந்து தொடர்ச்சியாக கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதில் இளம் யுவதி ஒருவர் ஸ்தலத்தில் துடிதுடித்துப் பலியானதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 வயதுக் குழந்தையுடன் நால்வர் உட்பட எட்டுப்பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

முதலிருஷெல்களும்மண்டைதீவு இராணுவமுகாமிலிருந்து படையினரால் ஏவப்பட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் லொறி எரிப்பு

(வவுனியா)
நேற்று முன்தினம் தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலையடுத்து ஆத்திரமடைந்த தேசவிரோதக் கும்பல்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்க லொறி ஒன்றை தீமூட்டி எரித்தனர். (எஸ)

## புனைப்பகுதியில் இடம்பெற்ற 50தமிழர் படுகொலை குறித்து
### பொலிஸ் விசாரணை ஆரம்பம்

[சொழும்பு]
மட்டக்களப்பு புனானைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐம்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக பொலிஸ் மட்டத்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவத்தில்இராணுவத்தினர் சம்பந்தப்பட்டது நிருபிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார். (ரி)

## மட்டு மாவட்டத்தில் படையினரால்கொலையுண்ட தமிழரின் விபரம்

(மட்டக்களப்பு)
கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டககளப்பு பொலநறுவை எல்லையில் அமைந்துள்ள மயிலந்தனைக் கிராமத்தில் இராணுவத்தினரால் கத்தியால் வெட்டியும், கோடரி, துவக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## கமிஷன் நியமிப்பு அரசின் உள்நோக்கம் கொண்டது
### - கருணாநிதி

(சென்னை)
தமிழக அரசு தம்மீதும் தமது குடும்பத்தவர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தி அவற்றை விசாரிப்பதற்காக விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது எனவும், காழ்ப்புணர்ச்சியைக் காட்டக்கூடியது எனவும் கலைஞர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடையேபேசிய திரு. கருணாநிதி முதல்வர் ஜெயலலிதாமீதும்

(6ம் பக்கம் பார்க்க)

## நொச்சிமோட்டைமோதலில் புளொட் உறுப்பினர் பலி

[வவுனியா]
நொச்சிமோட்டையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு புளொட் உறுப்பினர் பலியானார். இருவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நொச்சிமோட்டைப் பாலத்திற்கருகில் இம்மோதல் இடம்பெற்றது.

இம்மோதலையடுத்து வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பெரும் பதற்றம் நிலவியது. (ரி)

**வனத்தை வளர்த்து வனப்பைப் பெருக்கு**

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6678)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியா சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுச்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### நல்லை ஆதீனத்தில் பாலாஜி

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள், பக்தி பரவசமூட்டும் சமய புத்தகங்கள், இந்திய நாவல்கள் மற்றும் பல பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (எ-2359)

### சமய அறிவுப்போட்டி

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு தமிழ் மாமன்றம் நடாத்தும் சமய அறிவுப்போட்டி விண்ணப்பப் படிவம் ரூபா 10/- நல்லை ஆதீன மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம். (எ-2360)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு - 5)

யாழ். மாவட்டத்தில்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந் தோறும் நடாத்தப்படும் புலமைப் பரிசில் அடுத்த பரீட்சை 15-08-92 சனி மு. ப 8-00, மு. ப. 10 30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6670)

### விற்பனைக்கு

சைவவித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலையத்தில் (நல்லை ஆதீனம் அருகில்) சிறந்த பழ மர, மரக்கறி நாற்றுகளும் விற்பனைக்குண்டு. (சி6652)

### விண்ணப்பப் படிவம்

ஆங்கில ஆசிரியர் பதவிக்கான படிவம் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (சி. 6681)


**A/L 93**
**Paper Class**

12-01 - விலங்கியல்
01-02 - இரசாயனவியல்
02-03 - பௌதிகவியல்
03-04 - தாவரவியல்

ஆரம்பம்: 16-08-1992
(ஞாயிறு நண்பகல் 12 மணி)

New Master Institute
B. M. C. Lane, JAFFNA.
(ஏ 2361)


## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கிறிஸ்தவசேவ ஆச்சிரமம் 53வது ஆண்டு விழாவை இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

காலை 7 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையும், 9 மணிக்கு தோத்திர ஆராதனையும், 11 மணிக்கு கலந்துரையாடல், 12 மணிக்கு மன்றூட்டு செபம் பிற்பகல். 3-30 மணிக்கு பகிரங்கக் கூட்டமும் இடம்பெறவுள்ளது. (சு)

## பாசறை நிகழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

தென்னிந்திய திருச்சபையின் பண்டத்தரிப்பு வாலிபர் சங்கத்தின் ஒருநாள் பாசறை பண்டத்தரிப்பு வை எம். சி. ஏ. மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்றுநடைபெற்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு தென்னிந்திய திருச்சபைகளின் வாலிபர் சங்கங்களின் உறுப்பினர்களும், மருதனமடம் இறையியல் கல்லூரி மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெயநேசன் இப் பாசறையில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். [72 அ]


**இந்த இடம்!**

**உங்கள் தாகத்தை நிச்சயமாக பூர்த்தி செய்யும் ஒரு பொருளை அறிமுகப்படுத்தப்போகின்றது.**

நாளை வரை சற்றுப் பொறுமையைக் கையாளுங்கள்.

**நாளை இந்த இடத்தைக் கவனியுங்கள்!**

விளம்பர அமைப்பு,
செனித் ஜோ. எக்...

(சி-6682)


# நாளை மறு தினம் அகதிகளின் அடுத்ததொகுதி விமானத்தில் அனுப்பப்படும்

(சென்னை)

சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளின் அடுத்த தொகுதி எதிர்வரும் திங்கட்கிழமை விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள.

இதற்காக வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் தங்கியிருக்கும் அகதிகளின் 62 குடும்பத்தைச் சேர்ந்த 212பேர் நேற்று வேலூரிலிருந்து ஐந்து பேருந்துகளில் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்.

அடுத்த வாரம் இம்மாவட்டத்திலிருந்து மேலும் 130 அகதிகள் இராமேஸ்வரத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பபபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## கட்புலசாதனப் போட்டி வெற்றியீட்டிய மாணவர்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்விக் கோட்டம் நடாத்திய வர்த்தக கணக்கியல் பாடங்களுக்கான கட்புலசாதனப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் பற்றிய விபரங்களை யாழ். கல்வித்திணைக்கள வர்த்தக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராஜா அறிவித்துள்ளார்.

ஆண்டு 11: செல்வி க. தயாளினி பரு வட. இந்துமகளிர் கல்லூரி, செல்வன் இ. றமேஸ் பரு. ஹாட்லிக் கல்லூரி, செல்வன் ஞா. ஞானோதயன் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி.

ஆண்டு 10: செல்வி ந. ஜீவரஞ்சனி உடுப்பிட்டி மகளிர் கலலூரி, செல்வன் ஆர் பிரபேஸ்கண்ணன் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி செல்வி சி. சிவகௌரி கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி

ஆண்டு 9: செல்வன் எஸ். குவேந்தன் பரு. ஹாட்லிக் கல்லூரி, செல்வன செ. கோபிநாத் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், செல்வன் க. கிருபாகரன் தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயம். (52)

### மாதர் சங்கம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலயத்தினர் மாதர் சங்கம ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

நிலைய மண்டபத்தில் தலைவர் பொ இராமநாதன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தின் முடிவில் இப்பகுதி படித்த இளம்பெண்களின் நன்மை கருதி இம்மாதர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. [154-அ]

### உற்சவம்

(நெல்லியடி)

அல்வாய், அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ரதோற்சவம் இம்மாதம் 28ம் திகதி காலை 9-00 மணிக்கும். தீர்த்த உற்சவம் 29ம் திகதி காலை 6 மணிக்கும் நடைபெறவுள்ளது [16 -அ]

### பாடசாலை மண்டபம் புனரமைப்பு

(நெல்லியடி)

வடமராட்சி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் புலோலி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் ஒரு மண்டபம் 75,000 ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

விமானத் தாக்குதலில் சேதமடைந்திருந்த இப்பாடசாலை பல மாத காலமாக திருத்தியமைக்கப்படாததினால் மாணவர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் கல்வி பயின்று வந்ததையும் குறிப்பிடத்தக்கதாகும் [160-அ]

### இன்று

(பருத்தித்துறை)

புலோலி சிங்கை நகர் அறவழி பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சிங்கைநகர் மாவீரர் மைதானத்தில் இன்று திரு. வீ. நீ. தங்கவேல் தலைமையில் நடைபெறுகிறது. பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. எஸ். முருகேசபிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (52)

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆசனக்கோவிலின் வருடாந்த உற்சவத்திருநாள் திருப்பலிப்பூசை இன்று காலையும், திருச்சுரூபபவனி மாலையும் நடைபெறவுள்ளது. (வி)

### நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி
பாட்டு: வி. சிவஞானசேகரம்
வயலின்: வி. கே. குமாரசாமி
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்

### ஓய்வூதிய பணிக் கொடை

(மானிப்பாய்)

ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து 110 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைககப்பட்டுள்ளன.

இவற்றில் 29, விதவைகள் ஓய்வூதியம் பெறுவர்களினதும் 81 சிவில் ஓய்வூதியம் பெறுவர்களினதும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71 - அ)

### புலமைப் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, தந்தையரை இழந்த 100 மாணவர்களுக்கான கல்விப் புலமைப் பரிசில் திட்டம் ஒன்று, அறவழிப் போராட்டக் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து தோழமை இணக்க இயக்கத்தின் ஆதரவுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 100 மாணவர்கள் யாழ். குடாவிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கல்வி உபகரணங்கள் உட்படக் கல்வி கற்பதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளது. (வி)

# அகதி முகாம்கள் மறுசீரமைக்கபடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களின் ஓலைக் குடிசைகள் அனைத்தும் மிக விரைவில் மறுசீரமைக்கப்பட உள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது

எதிர்வரும் மழைக்காலத்துக்கு முன்பாக, அகதிகள் முகாம்களில் உள்ள ஓலைக் குடிசைகள் அனைத்தையும் மறுசீரமைப்பது என்றும், மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களில் அமைக்கப்பட்ட குடிசைகளை உடனடியாக அகற்றி, அவற்றை மேட்டு நிலங்களில் புதிதாக அமைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

முதல் கட்டமாக 1,300 குடிசைகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மறுசீரமைத்துக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. (வி)

## பொது அறிவுப் போட்டி ஹாட்லி முதலிடம்

(பருத்தித்துறை)

யாழ். றோட்டறிக்கழகம் யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின உயர்வகுப்பு மாணவர்களிடையே நடாத்திய பொது அறிவுப்போட்டியில் முதலாம் இடத்தைத் தட்டிப்பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியின் விபரம்.

செல்வன் தி. ராஜ்குமார். செல்வன் இ. சுதாகரன், செல்வன் உ. சிவரூபன். செல்வன் இ. ஸ்கந்தன், செல்வன் தி. அரவிந்தன், செல்வன் செ. வைகுந்தன்.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவிலே பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கான பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தையும் வெற்றிக்கிண்ணத்தையும் திருமதி கே. எம். சிவப்பிரகாசம் வழங்கினர். [52]

### செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி பயிற்சியளிப்பு திட்டத்தின் உட்துறை எணபார்வையார்களுக்கான செயலமர்வு இன்று காலை யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எஸ்)

### இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதில் கலை, இலக்கியவாதிகளின் பங்கும் பணியும் என்ற பொருளில் கருத்தரங்கும், கலந்துரையாடலும் கோண்டாவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. சோ. பத்மநாதன், திரு அ. யேசுராசா ஆகியோர் இதில் உரையாற்றுவர்.

யாழ்ப்பாணம்

# சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவ சிறப்பிதழ்

## சில்லாலை கதிரை மாதா ஆலயம்

வேத கலாபனை காலத்தில் வீரியத்துடன் விசுவாசத்தைப் பாதுகாத்து ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் அடிகளாருக்குப் புகலிடமளித்துப் பாதுகாத்த சில்லாலையூர், பாரம்பரிய பக்தியுணர்வுடனும் ஆடம்பரத்துடனும் தங்கள் காவற்தெய்வமாம் கதிரைச் செல்வியின் திருநாளைக் கொண்டாடுகின்றது.

கதிரை மீதமர்ந்து 'கதி கலங்கினோர், நோய்பிணியாளர், கடன் தொல்லையால் வாடுவோர், ஆன்ம ஈடேற்றத்தை நாடுவோர் அனைவரையும் அன்புடன் வரவேற்று அருள்பாலிக்கும் ஆரோக்கிய அன்னையின் அருளை நாடி அநேக பக்தர்கள் நன்றியுணர்வுடன் அவருடைய திருவிழாவில் பங்கு கொள்கின்றனர்.

போர்க்கால சூழ்நிலையில் அகதிகளாக அடைக்கலம் தேடி வந்தோர்களுக்கு அபயமளித்து சேயுடன் பாதுகாத்த அன்னைக்கு நன்றி சொல்ல குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் மக்கள் இப்பெருவிழாவில் பங்குகொள்கின்றனர். அரியாசனத்தமர்ந்து அருமை மகனை அணைத்து அனைவருக்கும் அருள் சொரியும் அமலனின் அன்னையின் ஆசி அனைவரோடும் இருப்பதாக! கதியறியாது கலங்கும் யாவரையும் தன் அன்பான அடைக்கலத்தில் தொடர்ந்தும் வைத்துக் காத்து அளவில்லாத அருட்கொடைகளை இடைவிடாது பெற்றுத் தந்திட மனமகிழ்வுடன் வாழ்த்திநிற்கின்றேன்.

**ம. ம. வே. அமிர்தக்குமார்**
(ஆலய பங்குத்தந்தை)

## வரலாறு கண்ட
# அற்புத ஆரோக்கிய அன்னை


இன்று 'கதிரை மாதா' என அழைக்கப்படும் அற்புத ஆரோக்கிய அன்னையின் வருடாந்தப் பெருவிழாவாகும். சரித்திரம் படைத்த பாரம்பரியம் கொண்ட அன்னையின் விழாவாகும். சில்லாலை கதிரை மாதா எனப்படும் எம் பாதுகாவலியாம் மோட்ச அன்னை, கதிரையில் வீற்றிருந்து திவ்விய பாலகனும் யேசுவை, தம்மடிமிசை வைத்து அன்போடு அரவணைக்கும் பாவனையில் இருப்பதால் ''கதிரை மாதா'' என எல்லோராலும் அன்போடும், அருளாளும் அழைக்கப்படுகின்றார். சரித்திர வரலாறு படைத்த இவ் அன்னையின் திருச்சுரூபமானது 1625ம் ஆண்டில் பண்டத்தரிப்புக் கோவிலிருந்து சில்லாலைக்குக் கொண்டுவரப் பட்டதாகும்.

1687ல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த, கோவை தியான சம்பிரதாய சபையைச் சேர்ந்த யோசேவ் வாஸ் எனப்படும் குரவர் இங்கு வந்திறங்கியதும் அவருக்கு ஏற்பட்ட வாந்திபேதி நோயை ஓர் பெண்மணி பராமரித்து அவர் நோய் குணமுறவேண்டினாளென்றும், அவரும் அவருடன் வந்த சீடன் ஜோனும் குணமுற்றார்கள் எனவும், இதன் காரணமாக யோசேவ் வாஸ் முனிவர் கதிரை மாதாவுக்கு ''ஆரோக்கிய நாயகி'' எனப் பெயர் வழங்கினார் என்றும் அறியக்கிடக்கின்றது.

''சின்ன உரோமை'' என சரித்திர வரலாறு கண்ட சில்லாலை, இன்று யாழ். நகரில் நம்மறையாம் சத்திய மறை நிலைத்து நிற்பதற்கு மூலகாரணம் என்றால் மிகையாகாது. இன்னல்கள் பல கண்டு துன்பங்கள் பல அனுபவித்து, இரத்தஞ்சிந்தி நம மறையை அன்றைய மக்கள் கட்டிக்காத்து வேதவைராக்கியத்தோடு வாழ்ந்தார்கள். வேதகலாபனையை முழுமூச்சோடு எதிர்கொண்டு நிலையான உறுதியோடும், குன்றாத விசுவாசத்தோடும் விளங்கினார்கள்.

போர்த்துக்கேயரின் வரவிலை நம்மறையைத் தழுவிக் கொண்ட மக்கள், ஒல்லாந்தரின் வரவிலை இன்னல்கள் பல கண்டாலும் விசுவாசத்தில் உரம் பெற்றார்கள், யோசேவ் வாஸ் முனிவரின் வருகைக்கும், நம்மறை வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. போர்த்துக்கேயரினால் அதிபூச்சியமாக ஆரோக்கிய அன்னையின் சுரூபம் காப்பாற்றப்பட்டுவந்தது.

ஒல்லாந்தரின் வேதகலாபனையில் இவ் அன்னையின் திருச்சுரூபமானது, இடம் மாற்றக் கிணற்றிலும், சந்து பொந்துகளிலும் மறைத்து வைத்துத்தான் காப்பாற்றப்பட்டது. இத்தகைய பல இன்னல்களைத் தாண்டித்தான் அற்புத அன்னைக்கு, சின்ன உரோமையின் அரசிற்கு 1836-ம் ஆண்டு வண. யோசை பேதுரு என்னும் குரவரால் அடிக்கல் நாட்டப்பட்டு கோவில் கட்டப்பட்டது. அன்றிலிருந்து நம் அன்னையின் ஆலய வளர்ச்சியில் பல நிலைகள், மாற்றங்கள் காணப்பட்டன. இன்று அற்புத ஆரோக்கிய அன்னையின் தெய்வீகப் புகழ் எத்திசையையும் பறைசாற்றும் அழகோவியமாக வரலாறு காட்டும் சாதனமாக விளங்குகின்றது.



தங்கச் சிம்மாசனத்தில், எழில் அழகோடு வீற்றிருந்து என் மகனை எப்படி அணைத்துள்ளேனோ அப்படியே உங்களையும், அண்டிவருவோர் அனைவரையும் காப்பேன், அஞ்சாதீர்கள் என அருளொழுகும் கண்களோடு எம்மை நோக்கும் எம் அன்னையானவள் கடந்த பல்லாண்டுகளாய் எமக்கு புரிந்துள்ள, புரிகின்ற அற்புதங்களுக்கு அளவில்லை.

அண்டினோர்க்கு அபயம் அளிக்கும் நம் அன்னை வேண்டினோர்க்கு இரங்கும் நம் அன்னை, நாடுவோர்க்கும் வாடுவோருக்கும் தஞ்சம் அளிக்கும் அன்னை, சொல்லாலே விளக்கிட முடியாத செல்வாலயின் சிம்மாசனம் கொண்டு விளங்கும் சின்ன உரோமையின் ராணியை நாம் வாயார வழுத்தி மனதார அஞ்சலித்துப் போற்றுவோம்.

இன்னல்கள் நிறைந்த இந்நாட்களில் எம் இன்னல்கள் நீங்கிட வேண்டுவோம். நம் நாட்டிலே நற்சமாதானம் நிலைத்திட வேண்டுவோம். அன்னையின் ஆசி நம் அனைவர் மேலும் நிறைவதாக.

[திருத்தாயாரின் பாடல்களின் சந்தத்தொனிப் பினையும், இரண்டு தலைமுறையினரால் இயற்றப்பட்டிருந்த பொழுதும் அவற்றின் சுவை குன்றாமல் இருப்பதைக் காட்ட இதோ சில அடிகள்]

## புலவர் நாவில்

அற்புத வரத்தியே! பொற்புறு குலத்தியே!
அமலன் உதி உதரத்தியே
அமலோற்பவத்தியே! அருள் ஊறகத்தியே!
அன்பு சுடர் விரதத்தியே

முற்பவம் இலத்தியே! மோட்சானந் தத்தியே!
மோன தவ ஞானத்தியே!
முத்தி தரு சித்தியே! மொய் பிறை பதத்தியே!
முடிவிலாத் தெய்வத்தியே

நற்றவ மனத்தியே! நாதன் கரத்தியே!
நம்பினோர்க் கபயத்தியே!
ஞால தீவர்ததியே! நடு நாயகத்தியே!
நாள் தோறும் உனை நற்றியே!

உற்ற நான் விர்த்தியே உறுமாறு பற்றியே
உன் மீது கொள வைத்தியே!
உத்தம உளத்தி! பரிசுத்தி! அதி சித்தி எனக்
கொத்துயர நித்தம் அருளே.

—சில்லையூர் செல்வராஜன்

மலர் மலரப் பெருமனதுடன்
பொருள் ஈந்தோர்
அனைவருக்கும்
அன்னையின் அருள்
குறைவறக் கிட்ட

**எம்மன்றாட்டுக்கள்**

## வாழ்த்துகிறேன்!

கத்தோலிக்க விசுவாசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க சில்லையூர் மக்கள் தங்கள் பாதுகாவலிக்கு இன்று விழா எடுப்பதும் மலர் வெளியிடுவதும் பொருத்தமான ஒன்றேயாகும். இம் மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பி வைப்பதையிட்டு நான் மகிழ்கின்றேன்.

எமது மண்ணில் விசுவாச வித்து ஊன்றப்பட்டு 450 வருடங்களுக்கு மேலாகிறது. 1541ல் 395 கிறீஸ்தவர்களை உள்ளடக்கி, அன்னைக்கு ஒரு சிற்றாலயம் அமைத்தனர் எமது முன்னோர் அன்று தொட்டு இன்றுவரை அன்னையின் வணக்கமுறைப்படி விழா ஆவணி 15ல் எமது பங்கில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

7 தேவாலயங்களை உள்ளடக்கிய சில்லாலைப் பங்கின் நடுநாயகமாகத் திகழ்வது, புனித கதிரைச் செல்வியின் தேவாலயம்.

விசுவாசத்தில் மட்டுமல்ல, தேவ அழைத்தலிலும், யாழ். மறை மாவட்டத்தில் அனைத்துப் பங்குகளையும் விஞ்சி நிற்பது, எமது சில்லாலை என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன். ஒரு ஆயரையும், 25 மறைப் போதகக் குருக்களையும், பல்வேறு சபைகளின் உள்ள 42 அருட் செல்விகளையும், 6 மறைத்

(4-ம் பக்கம் பார்க்க)

பற்றிமா
வாச் வேர்க்ஸ்
பிரதான வீதி
பண்டத்தரிப்பு

லக்சறிஸ் சென்ரர்
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

பயனியர் ரேட்ஸ்
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

குணம் போட்டோ
சில்லாலை
பண்டத்தரிப்பு

ஸ்ரீ அம்மாள்
குரோசரிஸ்
பண்டத்தரிப்பு

G. R. பிறிண்டேர்ஸ்
பண்டத்தரிப்பு

அ. செல்வராசா
ஸ்ரோஸ்
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

குயின்ரன் பேக்கரி
சில்லாலை
பண்டத்தரிப்பு

அருள் ஸ்ரோர்ஸ்
சில்லாலை
பண்டத்தரிப்பு

கி. ஆனந்தகுமார்
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

கலா அஜந்தன் மில்
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

குணம் மோட்டோர்ஸ்
சில்லாலை
பண்டத்தரிப்பு

லைப் போட்டோ ஸ்ரூடியோ
சில்லாலை
பண்டத்தரிப்பு

லைடன் பிடவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

WHITE HOUSE,
வைற் ஹவுஸ்,
Floral and Funeral Undertakers,
180, Main Street, Jaffna.

மரியாயே வாழ்க!
Gristal Lodge
— ஓர் அடியான்

V. T. & SONS,
லாவண்யா பல், மூக்குக் கண்ணாடி அகம்,
(கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவரும் - பல் கட்டுபவரும்)
302, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (எழிலகம் முன்பாக)
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (இலங்கை வங்கிக்கு அருகாமை)
175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (பஸ் நிலையம் முன்பாக, ராணி சினிமா அருகாமை)

## ★ வெளிநாட்டு மோகத்தினால்

# 8 லட்சம் ரூபாவை இழந்த இளைஞர்கள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெளிநாட்டு முகவர் மூலம் கனடா செல்ல, ரூபா எட்டு லட்சம் கட்டிய வடமராட்சி இளைஞர்கள், தற்பொழுது வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் தெற்கில் வசிக்கும் இளைஞர்கள் சிலர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பு- மருதானையிலுள்ள வெளிநாட்டு பிரயாண முகவரான முஸ்லிம் ஒருவரிடம் ரூபா எட்டு லட்சத்தை கொடுத்திருந்தனர். விரைவில் கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிய முகவர் எட்டு லட்சத்துடன் தலைமறைவாகிவிட்டார்.

இதனால் மனவேதனையுற்ற இளைஞர்கள், முகவரை அறிமுகம் செய்துவைத்த உதவி முகவரின் மகன் ஒருவரை டெலிக்கா வான் மூலம் பணயக் கைதியாக கடத்திச்சென்றனர். இது சம்பந்தமாக பொலிசாருக்கு கிடைத்த புகாரையடுத்து, நீர்கொழும்பு றமணி மாவத்தையை அண்டிய காட்டுப்பகுதியிலிருந்து, பணயக்கைதியையும், இளைஞர்களையும், டெலிக்கா வானையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

தற்பொழுது இளைஞர்கள் மூவரும் அவர்களது சகாக்களும், ஆறு மாதகால விளக்கமறியலில் வெலிக்கடைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்கள். (160-ரி)

## அலங்கார உற்சவம்

(உடுவில்)

வண்ணார்பண்ணை வடமேற்கு பிரப்பங்குளம் ஸ்ரீ தான்தோன்றீஸ்வர வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் தற்போது நடைபெற்றுவருகின்றது. ஆசிரிய ஆலோசகர் திரு எம். எஸ். ஸ்ரீதயாளன், உற்சவகாலத்தில் சங்கீதஞான கதாகாலட்சேபம் செய்துவருகிறார். (109)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-09-18ம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்**

1. **தற்காலிக உதவி விரிவுரையாளர்**
   - கிறிஸ்தவ நாகரீகம்
   - நாடகமும் அரங்குக்கலைகளும்
   - நுண்கலை
   - பொருளியல்
   - அரசறிவியல்
   - மெய்யியல
   - இந்து நாகரீகம்
   - புவியியல்
   - தமிழ்
   - ஆங்கலம்
   - தொழில் நிர்வாகம்
   - வர்த்தகம்
   - சித்தமருத்துவம்
   - ஆற்றுகைக்கலை-கர்நாடக சங்கீதம்/வாய்ப்பாட்டு
   - ஆற்றுகைக்கலை-கர்நாடக சங்கீதம்/வாத்தியங்கள்
   - ஆற்றுகைக்கலை நடனம்/பரதநாட்டியம்.
2. **தற்காலிக கட்டுரை ஆசிரியர்**
   - புவியல்
   - வரலாறு
3. **தற்காலிக போதனாசிரியர்**
   - ஆங்கிலம் – தரம் II
   - பரதநாட்டியம்
   - கர்நாடகவாய்ப்பாட்டு
   - மிருதங்கம்
   - வயலின்
   - வீணை
4. **இடைவரவு விரிவுரையாளர்**
   - வர்த்தக, கைத்தொழிச் சட்டம்
   - சட்டச்சூழல்
   - கணக்கியல்
   - கணக்காய்வு
   - வரி விதிப்பு
   - வங்கியியல்
   - கிரேக்க மத்தியகால மெய்யியல்
   - தற்கால மேற்கத்திய மெய்யியல்
   - பொது உளவியல்
   - சமய மெய்யியல்
   - பழைய ஏற்பாட்டியல்
   - புதியஏற்பாட்டியல்
   - கிறிஸ்தவ மெய்யியல்
   - திருச்சபை வரலாறு
   - கிறிஸ்தவவழிபாட்டியல்
   - தமிழ் (சித்தமருத்துவம் பற்றிய அறிவுடன்)
   - மீன்பிடிப் புவியியல்
   - பிரான்சிய மொழி
   - நாடகமும அரங்குக்கலைகளும் (வேடப்புனைவு, நடிப்புக் கொள்கைகள், ஒளி, மரபு வழிநாடகம்)
5. **இடைவரவு போதனாசிரியர்**
   - பாரம்பரிய கைவினைகள்
   - நவீன ஓவியம்தீட்டுதல்
   - கட்டிடக்கலை
6. **தற்காலிக செய்முறை காட்டுநர்**
   - சித்தமருத்துவம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெறவிரும்புபவர்கள் 23X10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல்வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப் டும் விண்ணப்பங்கள மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல்வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி.
1992-08-12.

(ஏ-2363)

# யாழ். அரச அதிபரால் சிறுதானியம் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளிடமிருந்து குரக்கன், பயறு, கௌபீ ஆகிய சிறு தானியங்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். அரச அதிபர் முன்வந்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யபபடும் மேற்படி சிறு தானிய வகைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவு முத்திரைகளுக்கு வழங்கப்படுமென்று கூறப்படுகிறது.

விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ குரக்கன் 26-00 ரூபாவுக்கும், பயறு 25-00 ரூபாவுக்கும், கௌபீ 20-00 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுமென்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (வி)

## மாணவிகளுக்கு போஷாக்குணவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ நிறுவனம் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் 10ம் ஆண்டு வகுப்பில் படிக்கும் தாய், தந்தையரை இழந்த வசதியற்ற நிலையிலுள்ள எட்டு மாணவிகளுக்கு 1750 ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்வது என்று தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு மாணவிக்கும் 1750 ரூபா பெறுமதிமிக்க சீருடைகள், பாடசாலை உபகரணங்கள், போஷாக்கு உணவு என்பன விரைவில் வழங்கப்படவுள்ளதாக பண்டத்தரிப்பு வை எம். சி. ஏ. யின் செயலாளர் திரு. எஸ். இரத்தினவேல் தெரிவித்தார். (72)

## வாழ்த்துகிறேன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்களையும் உருவாக்கி உலகிற்கு அளிக்க உதவி புரிந்தவள் அன்னை கதிரைச் செல்வி.

உடல் வைத்தியத்திற்குப் பேர்போன சில்லாலை மண்ணில், இவ்வளவு தொகையான ஆன்மீக வைத்தியர்களும் உருவானது, சில்லாலைக்குச் சிறப்புச் சேர்க்கும் பெருமையாகும்.

''மருந்து மாதா'' என மற்றொரு பெயரால் அழைக்கப்படும் எங்கள் ''கதிரைத் தாய்'' எமது மக்களையும், அவளை அன்புடன் நாடிவரும் எண்ணற்ற பக்தர்களையும், அவர்களின் உடல், உள நோய்களில் இருந்து விடுவிப்பாளாக

இறை மகன் யேசுவின் அரியாசனத்துக்கு, சரியாசனம் அமைத்துக் கொடுத்து மரியன்னை மகிமைப்படுத்திய வல்ல இறைவன், நீதியும் சமாதானமும் சுபீட்சமும் உள்ள வாழ்வை அனைவருக்கும் தரவேண்டி ஆசிக்கின்றேன்! வேண்டுகிறேன்!!

சில்லாலை மக்கள் அன்னைக்கு எடுக்கும் விழா சிறப்புற நிறைவேற வேண்டி வாழ்த்துகிறேன்.

**சுகந்தன் இன்னாசித்தம்பி**
செயலாளர்,
பரிபாலனசபை.

''இன்னாசித்தம்பி வளவு'',
சில்லாலை.

# யாழ். சர்வோதயம் மூடப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் சர்வோதய நிறுவனம் எக்காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது என்று கொழும்பிலுள்ள தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

போதிய நிதிப்பற்றாக்குறை காரணமாக இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது இதனால் இவ்வருடம் பங்குனி மாதத்தின் பின்பு இந்த நிறுவனத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட ஊழியர்களை மட்டுப்படுத்தும்படி அறிவித்ததுடன், யாழ் மாவட்டத்தில் இந்த நிறுவனத்தினால் தற்போது பராமரிக்கப்பட்டுவரும் 799 அகதிகள் குடும்பங்களுக்கும் தொடர்ந்தும் பண உதவிகளும், மற்றைய உதவிகளும் வழங்கப்படுமென்றும் கொழும்பிலுள்ள சர்வோதய தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (வி)

## வீதிச்சீர்கேடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு துறைமுகம் சந்தியிலிருந்து மணியம் தோட்டம் செல்லும் பிரதான வீதி பிரயாணிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் பலத்த சேதமடைந்துள்ளது. (154-அ)

# வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர் செலவினம் பற்றி அறிக்கை

(உடுப்பிட்டி)

வடக்குகிழக்கு மாகாணசபையின் கடந்தகால செலவினங்கள் தொடர்பான சகல விபரங்களையும் விரைவில் சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர் பணித்திருப்பதாக மாகாணசபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

முன்னைய மாகாணசபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் மேற்கொண்ட செலவினங்கள் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கடந்தகால கொள்வனவுகள் பற்றிய விபரங்கள் யாவும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இந்தப் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிகிறது. (150-அ)

## இராசி பலன்

15 08-1992
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆடி 31)

துதியை: முன்னிரவு 7-41 வரை. சதயம்: பிற்பகல் 2-04 வரை. அமிர்தயோகம் இராகுகாலம் காலை 9-05 முதல் 10 35 வரை. சுப நேரம்: மாலை 3-05 முதல் 4-35 வரை.

மேடம்; தொழில் லாபம், நண்பர் சகாயம், மனக் கிளர்ச்சி.

இடபம்: பொதுப் பணி, மாமனார் அனுகூலம், காரிய சித்தி.

மிதுனம்: பயணச் சிக்கல், மன வெறுப்பு, குடும்பக் கவலை.

கடகம்: அமைதி குன்றல், தொழில் பாதிப்பு, அலைச்சல்.

சிங்கம்: பணியாள் சகாயம், தொழில் சிறப்பு. விருந்தினர் வருகை.

கன்னி: கற்பனை மிகுதி, கடமையுணர்வு, தற்பெருமை.

துலாம்: மனப் பயம், வேண்டாத் தொல்லை, அவமதிப்பு.

விருச்சிகம்: சகோதரி பகை, கடன் சுமை, குறை கேட்டல்.

தனுசு: இனசன வருகை, தொழில் சிறப்பு, வாக்கு வன்மை.

மகரம்: அதிகப் பிரசங்கம், மனச் சுமை, அகால போசனம்.

கும்பம்: மனக்களிப்பு, குடும்ப சுகம், நற்செய்தி.

மீனம்: மேலதிகாரிகள் துன்பம், கண்துடைப்பு, பண முடை.

— ஜோஸ்யர்

# மருந்துக்கலவையாளருக்கு வாரத்தில் 5 நாள் வேலை

[பண்டத்தரிப்பு]

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக்கலவையாளர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் கடமையாற்றுவதை அமுல்படுத்துவதென்றும் சனி, ஞாயிறு நாட்களில் கடமையாற்றுவதற்கு படி (அலவன்ஸ்) வழங்குவது என்றும் சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதுபற்றியசுற்றுநிருபம் ஒன்று சகல பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகங்களுக்கும் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சனி ஞாயிறு தினங்களில் கடமையாற்றுவதற்கு அடிப்படைச் சம்பளத்தில் இருபதில் ஒரு வீதம் தினமொன்றுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் மேற்படி சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் தொழிற் சங்கம் இது தொடர்பாக சுகாதார அமைச்சிடம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்துவந்தது குறிப்பிடத்தக்கது. (அ-72)

## நல்லையின் நாதனை நினைந்திடு மனமே!

நல்லையில் உறைபவன் நன்மைகள் செய்பவன்
நாடிடும் அடியவர் நலன்களைக் காப்பவன்
தொல்லைகள் தீர்ப்பவன் துணையென வருபவன்
தமிழதன் தலைவனாய்த் திகழ்ந்திடும் இறையவன்
எல்லைகள் அற்றநற் கருணையாம் கடலவன்
அழகான மயிலினில் ஏறிடும் சரவணன்
அல்லல்செய் சூரனை வேல்கொண்டு வதைத்தவன்
அவன்பதம் நினைந்திடு அலைந்திடும் மனமே!

ப. மகேந்திரதாசன்

★ இன்று நல்லூர் கந்தசாமி கோவில் 13ம் திருவிழா

## நாவாந்துறை புனித பரலோகமாதா தேவாலயத்தின்
# 50-வது ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர்

## ஆலயத்தின் ஐம்பது ஆண்டுகளும் பங்கு மக்களும்

நாவாந்துறை புனித பரலோக மாதா தேவாலயம் இன்று 15-8-92இல் தனது 50வது ஆண்டு நிறைவு விழாவை சிறப்புடன் கொண்டாடுகிறது. வடபகுதியில் உள்ள மாதா கோவில்களில் மிக அழகான இத்தேவாலயம் சிறப்பான வரலாற்றையும் கொண்டுள்ளது.

அலை கடல் தவழும் கரையோரம் பலவளமும் செழித்து கலை, கல்வி, ஞானம் தழைத்தோங்குவது நாவாந்துறைக் கிராமம், திரைகடல் ஓடி திமிலம் செலுத்தி திரவியம் தேடும் வணிககுலத்தோர் வன்னிமை சிந்து நாடார் எனப்புகழ்பெற்று விளங்கும் மக்களுக்கு கருணை வழங்கி அருள்பாலித்துவரும் அன்னை தேவதாய்க்கு நாவாந்துறை வடக்கு பகுதியில் அழகுற அமைந்துள்ளது இத்தேவாலயம்.


இற்றைக்கு ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் பல்குலத்தோரும் பகிர்ந்து பாங்குடன் திருவிழாவை கொண்டாட உரிமை பெற்றிருந்த புனித நீக்கிலஸ் தேவாலயம் கிராமத்தின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்தது.

ஒவ்வோர் பகுதியினரும் ஒருநாள் திருவிழாவை மகிழ்வுடன் பொறுப்பேற்று அலங்கரித்து கொண்டாடி வந்தனர்.

இவ்வேளையில் வடக்குத் தெரு இளைஞர்கள் சிலர் சுதந்திரமும் சுயாதீனமும் உள்ள ஆலயம் ஒன்றைத் தேவ அன்னையின் பெயரில் நிறுவ வேண்டுமென ஆவலுற்றனர்.

அக்காலத்தில் புனித நீக்கிலாஸ் ஆலயத்தில் பங்குக் குரவராக இருந்த அருட்திரு நல்லையா சூசைநாதர் அவர்கள் இவ்விருப்பத்திற்கு இசைந்து ஆசியும் வழங்கி வழிகாட்டியானார்.

1937ம் ஆண்டு சென்மேரிஸ் வாலிப சன்மார்க்க அபிவிருத்திச் சங்கமென்ற அமைப்பினை உருவாக்கி, விளையாட்டுத் துறையிலும், சமூகப்பணியிலும் ஈடுபாட்டுடன் உழைத்து வந்த இளைஞர்கள் சமயப் பணிகளிலும் கவனத்தைத் திருப்பினர். இவ்வமைப்பின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவின்போது தேவதாய் விண்ணகத்திற்கு ஏகிய தினத்தில் 1942ம் ஆண்டு ஆவணி 15ம் நாள் பரலோக தாயின் சொரூபத்தை பிரதிமை செய்து, ஓலைவேய்ந்த குடிலில் கோவிலை உருவாக்கினர்.



பங்குக்குரவாராக இக்காலத்தில் பணிபுரிந்த அருட்திரு வி. ஆர். தாசியஸ் அடிகள் ஆரம்பத்தில் இந்நிலையை ஏற்றுக்கொள்ள சுயங்கிஞர். பின் ஆய்ந்து தெளிந்து யாழ். ஆயரின் அனுமதியையும் பெற்று பிரமாண்டமான ஆலயம் ஒன்றை உருவாக்குவதற்கு அங்கிகாரத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வாலயத்திற்கான அத்திவாரம், 1944ம் ஆண்டு யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய எஸ். ஏ. கியோமார் அடிகளால் பங்குத்தந்தை வி. ஆர். தாசியஸ் அடிகள் முன்னிலையில் இடப்பட்டது.

அடுத்துவந்த பங்குத்தந்தையும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவருமான அருட்திரு ஏ சார்வே அடிகள் ஆலயத்தின் அத்திவார வேலைகளை அபிவிருத்தி செய்து கடுமான வேலைகளை துரிதப்படுத்தினர். மக்கள் சிரமதான அடிப்படையில் ஆர்வத்துடன் கட்டுமான வேலைகளில் முன்னின்று உழைத்தனர். உழைப்பின் பெரும்பகுதியை கோயிலின் வளர்ச்சிக்கு உவந்தளித்தனர்.

ஆரம்பத்தில் ஆலயத்தின் உருவம் ஐரோப்பிய ஆலயங்களின் மாதிரியைக் கொண்டிருந்தது மிகவும் ஆடம்பரமானது. பணமும் உழைப்பும் தேவைக்கும் அதிகமாக செலவிடவேண்டியிருந்தது. விரைந்து ஆலயத்தை பூர்த்தியாக்க வேண்டிய அவசியமும் இருந்தது.

வண. சார்வே அடிகளுக்குப் பின் பங்குப் பொறுப்பேற்ற பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த வண. வை. கறேவ் அடிகள் ஆலயத்தின் அடிப்படைத் தோற்றத்திலே அழகும் எளிமையும் துலங்கும்படியான மாற்றத்தைச் செய்தார். கீழைத்தேச கட்டிட மரபு அமைப்பு மாதா கோவில்களின் மாதிரிகளைப்பின்பற்றி கோவில் அமைப்புக்கள், கூரை வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து ஆலயத்தின் வேலைகளை ஓரளவு நிறைவு செய்தார். இவரது காலத்திலேயே ஆலயம் மிகவும் விரைந்து கட்டப்பட்டது என்பது மக்களின் கருத்தாகும். வண. கறேவ் அடிகள் ஆலய வேலைகளுடன் இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்புகளிலும் முன்நின்று உழைத்தார்.

வண. கறேவ் அடிகளுக்கு அடுதது பொறுப்பேற்றவர் வண மேரியோசேப் அடிகள், ஆலயத்திற்கு பொருத்தமான வர்ணங்கள் இட்டு அழகுபடுத்தினர். மேற்பரப்பில் சுவரை சுற்றி யன்னல்களை அமைத்து பல நிறங்களில் கண்ணாடிகளை பதித்து ஆலயத்தின் அமைப்பு முழுவதையும் பூர்த்தி செய்தார். அத்தோடு 1937 இல் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு பி எம். இம்மனுவேல்ஆலயத்தின் முன் மண்டப (போட்டிகோ)த்தை அமைப்பதற்கு துணைபுரிந்தார்.

இன்று உலகம் முழுவதும் அன்னையின் ஆரோகணதினம் பக்திசிரத்தையுடன் கொண்டாடப்பட்டுவருகிறது.

ஆலயத்தின் 50 வது ஆண்டு நிறைவினையும், அகமகிழ்ந்து ஆர்வத்துடன் கொண்டாடுகின்றனர். மேலும் ஒரு நூற்றுண்டு நிறைவு செய்ய வளர வாழ்த்துவோம்.

சிறப்பு மலர் தயாரிப்பு:
**செள். மேரிஸ் சனசமூக நிலையம்**
நாவாந்துறை.

நாவாந்துறை புனித மரியாள் தேவாலயத்தின்
50வது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துகிறுர்கள்.

**மரியா மதுபானச்சாலை**
131, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

**டானியல் மணிக்கூட்டு தொழிலகம்**
694, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**எஸ். எம். பெர்ஞண்டோ**
(கண் பரிசோதித்து தரமான கண்ணுடி வழங்குபவர்கள்)
580, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

**பவுலிஞ பலசரக்கு மாளிகை**
உரிமையாளர்: ம. பவுலிஸ்
சூரியவெளி, நாவாந்துறை.

**ஐறின் ரீ றூம்**
உரிமையாளர்: க. செல்வராஜா
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

**மொருய்ஸ்**
(பல் கட்டுபவர்
கண் பரிசோதித்து கண்ணுடி வழங்குபவர்கள்)
50, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

நாவாந்துறை புனித மரியாள் தேவாலயத்தின்
50வது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துகிறுர்கள்.

அன்பளிப்பு:
**க. பேரின்பநாதன்**
106, முத்தமிழ் வீதி, கொட்டடி.

**F பஸன் ஹவுஸ்**
65, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
299, 301, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**டொறின் கூல் பார்**
உரிமையாளர்: செ. செல்வக்குமாரன்
388, கடற்கரை வீதி, நாவாந்துறை.

**மணியம் ஸ்ரோர்ஸ்**
ஆறுமுகம் சுப்பிரமணியம்
2, சென் மேரிஸ் லேன், நாவாந்துறை.

**சரஸ்வதி ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர்; சி கனகராசா
இல. 8, சிவகுமாரன் வீதி, நாவாந்துறை.

### வாழவைப்பாய் தாயே

வான்முகட்டின் தாரகைகள் வடிவமைத்து உந்தன்
சிரமதிலே முடியாக சேர்ந்து ஒளி கூட்ட
கூன்மதியும் உன்பாதம் பணிந்து சரணடைய
வெண்முகில்கள் உமைத் தாங்கி விண்ணகம்
சேர்த்ததம்மா

யோ. பிரான்சிஸ்

### ஆலய பொன் விழா

தாயாகிச் சேயாகித் தானனைத்தே......
தஞ்சமென்று வருவோர்க்கும் இடமழித்தே
ஓயாது இரந்து கேட்கும் அடியவர்க்கு
ஒளியாக விளங்கிடுவாள் என்றுமவள்

ம. சிந்தாத்துரை

**எஸ். கே. எம்.**
**கடல்உணவு பதனிடும் தொழிலகம்**
கடற்கரை வீதி, நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

**எஸ். அன்ரன்**
**கடல் உணவு பதனிடும் நிலையம்**
கடற்கரை வீதி, நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

# செலவின அதிகரிப்பால்

## வரவு செலவு திட்டத்தில் நெருக்கடி

(கொழும்பு)

பாதுகாப்பு செலவின அதிகரிப்பு, அகதிகள் பராமரிப்பு மற்றும் அரசியல் நோக்கங்களுடனான நலன்புரி திட்டங்கள் காரணமாக இலங்கையின் வரவு-செலவு திட்டம் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகி இருப்பதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத வகையிலான இச்செலவினங்களால் ஏற்கனவே செய்த கணிப்பீடுகளின் பிரகாரம் செயற்படங்களால் முடியாமலிருக்கிறது என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவ்வருடம் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட 1530 கோடி ரூபா 1800 கோடி ரூபா அல்லது 1900 கோடி ரூபாவாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை பாதுகாப்புக்கென எவ்வளவு தொகை செலவிடப்பட்டதென்பதை அவர் கூறவில்லை.

ஜனசவிய மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசசீருடை வழங்கல் போன்ற அரசியல் நோக்குடைய நலன்புரித் திட்டங்களினால் திறைசேரிக்கு மேலதிக சுமைகள் ஏற்படுகின்றன

இதற்கென 300-400 கோடி ரூபா தேவைப்படுகிறது. இதை எங்கிருந்து பெறுவதென்பது தெரியவில்லை. சிகரெட் மற்றும் மது வகைகள் மீதான வரியை அதிகரித்ததன் மூலமாக மேலதிக வருவாயைப் பெற்று வீழ்ச்சியைச் சரிக்கட்ட அரசு முயல்கின்றபோதிலும் 1992ச்கான வரவு செலவுத திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 15,660 கோடி ரூபாவை விட செலவு அதிகமாகும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

# கத்திவெட்டுக்கு குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி)

நேற்று முன்தினம் கம்பர்மலை குடியேற்றப் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக நடைபெற்ற சண்டையில் அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காடு வெட்டும் கத்திக்குப் பலியானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரைத் தாக்கியவரான அந்தோனிப்பிள்ளை இரவீந்திரன் (வயது-38) என்பவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறந்தவரது சடலம் பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-51-100)

# அரசு இராணுவத் தீர்விலேயே இன்னும் நாட்டம் கொண்டுள்ளது

## பி.பி.ஸி. கணிப்பு

(லண்டன்)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு தீவிரவாதப் போக்குடைய புதிய இரு இராணுவத் தளபதிகள் நியமிக்கப்பட்டமை அரசு இராணுவத் தீர்விலேயே அதிக நாட்டம் கொண்டிருப்பதையே புலப்படுத்துவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருப்பதாக பி. பி. சி, தனது நேற்றைய செய்திக் கணிப்பில் தெரிவித்தது.

மிதவாதிகளான டென்சில் கொப்பேகடுவவும், விமல விஜயரட்ணவும் கொலை செய்யப்பட்டதன் மூலம் புதியவர்களின் நியமனம் சமாதானத்திற்கான வாய்ப்புகளைக் குறைத்து விட்டதாகவும் விடுதலைப் புலிகளுக்கு சமிக்ஞை காட்டுவதாக உள்ளதாகவும் அரசியல் பார்வையாளர்களும் இராணுவ வட்டாரங்களும் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் அந்தக் கணிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-க)

# பேக்கர் ராஜினமா

(வாஷிங்டன)

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

# அராலி சம்பவம்:

## ஜீப்வண்டியை ஒதுக்கிச்செல்ல முனைந்தபோது கண்ணி வெடித்தது

(கொழும்ப)

வீதியிலுள்ள குழியொன்றை தவிர்ப்பதற்காக மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண ஜீப் வண்டியை சற்று ஒதுக்கிச் செலுத்த முனைந்தபோது அமுக்க குண்டு வெடித்தது.

இவ்வாறு அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் கேர்ணல சரத் முனசிங்கா தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியே வெடித்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை களத்தையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்

கைது செய்யப்பட்டவர்களின் விசாரணையின்பின் மேலும் பலர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்றும் அவர் மேலும் கூறினுர். [ரி]

# இராணுவ தலைமைப்பீடம் குழம்பிய நிலையில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கைளை மேற்கொள்ளும் நிலையில் இராணுவம் தற்போது இலலையென்று முன்னுள் விமானப்படை அதிகாரி திரு. ஹரி குணதிலக்கா கூறியுள்ளார்.

கடந்த வாரம் தீவகப் பகுதியில், விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இராணுவத்தின் முக்கிய அதிகாரிகள் அனைவரும் இறந்ததினுல், இராணுவத்தின் தலைமைப்பீடம் குழம்பிய நிலையில் இருப்பதாகவும், இதனுல் வடக்கு-கிழக்குப் பகுதிகள் மீது மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் இராணுவம் தற்போது தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகவும், இராணுவ அதிகாரிகளின் இறப்பனுல் தற்போது நடைபெற்றுவரும் பிரிவினைபோரில் புதிய திருப்பங்களும் ஏற்படலாம் என்றும் திரு. ஹரி குணத்திக்கா மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமசேவையாளர் வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை எதிர்வரும் 27-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். நகரிலுள்ள 25 பரீட்சை மண்டபங்களில் மேற்படி பரீட்சை நடத்துவதற்கான ஒழுங்குகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (மா)

### கமிஷன் நியமிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்குற்றச்சாட்டுகளை சுமத்தினுர்.

சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தனியாரிடம் ஒப்படைத்தல், ஸ்பிக் நிறுவனத்திற்கு காட்டிய சலுகைகள், உல்லாச டஸ்களுக்கு வரி குறைப்பு போன்றவற்றில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஊழல் புரிந்ததாக ஜெயலலிதாமீது குற்றம்சாட்டினுர்.

தமிழக ஆளுநரை அணுகி இத்தகைய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நீதிமன்றத்தில வழக்கு தொடுக்க தமது கட்சி அனுமதி கேட்டு விண்ணப்பிக்கும் என்றும் கூறினுர்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள நிலையில் தமிழக மக்களின் கவனத்தை திருப்பவும், எதிர்க்கட்சிகள்மீது வீண் பழி போடவும் இத்தகைய விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினுர். (சி)

### மட்டு மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கூரிய ஆயுதங்களால் சுட்டும் தாக்கியும் கொல்லப்பட்ட தமிழர்கள் விபரங்கள் வருமாறு:

கருப்பையா குமுதினி[வயது 8], கருப்பையா விஜயராணி [2], கருப்பையா ரகுநாதன் [4], ராமையா மயில்வாகனம் [49], பேபிநோனு [32], மயில்வாகனம் சுஜாதா [4], மயில்வாகனம் மகேஸ்வரி [2], மாணிக்கன் அப்புக்குட்டி [42] விஜயலட்சுமி அப்புக்குட்டி [37], அப்புக்குட்டி லோகசாந்தி [17], அப்புக்குட்டி விஜிதா [14], அப்புக்குட்டி சுதாகர் [9], முத்துவேலு சின்னம்மா [60], ஆண்டியப்பன் லில்லிநோனு [37] ஆண்டியப்பன் தங்கலட்சுமி [9], தம்பிப்போடி சுப்பிரமணியம் [30], சுப்பிரமணியம் கிருஷ்ண பிள்ளை [12], சுப்பிரமணியம் சந்திரமதி [8], கந்தசாமி மாதவி (33), வைரமுத்து கோமேரி (20), வைரமுத்து திலகரட்ணம் (31), சின்னத்தம்பி வைரமுத்து (70), தாவீது மரியமுத்து (71) ராசமணி ரவிக்குமார் (4)

இச்சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விபரம்:

திலகரட்ணம் கோசலா(25) பிள்ளையான் ராசமணி (43), சொக்கலிங்கம் சுப்பிரமணியம் (36), நல்லதம்பி தங்கப்பிள்ளை (72), தியாகராசா சிவமலர் (30), தியாகராசா லதா (8), தியாகர் லதா [1] தாவீது ஸ்ரீநிவாசன் (04) கருப்பையா மாகிமம்மா (25) (எஸ்)

### பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி இந்தியா இலங்கையிடம் இன்னும் முறைப்படி கோரவில்லை. இது இன்னும் பரிசீலனையிலேயே இருக்கிறது என்று இந்தியத் தூதுவர் திரு என். என். ஜா கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் பற்றி இறுதிமுடிவு செய்யவேண்டியது இந்திய மத்திய அரசுதான் ஆனல்இதுவரை மத்திய அரசு எந்தஒரு முடிவையும் எடுக்கவில்லையென்றும், இதே நேரம் விடுதலைப்புலிகளை எந்தஒரு பேச்சுவார்த்தைக்கும் இந்தியா அழைக்கவில்லையென்றும் திரு ஜா பத்திரிகையாளர்களிடம் மேலும் தெரிவித்தார். [வி]

### இரத்மலானை

1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 11 மணியளவில் வங்கியிலிருந்து வாகனமொன்றில் சமபந்தப்பட்ட ஊழியர்களுக்கான சம்பளம் கொண்டுவரப்பட்டது.

வாகனம் தொழிற்சாலையின் பிரதான வாயிலுக்கு வந்தபோது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பதிகாரிகள் அந்த வாகனத்தை நிறுத்தி பரிசோதனை செய்தபோது திடீரென அங்கு தோன்றிய ஆயுதம் தாங்கிய கும்பல் பலத்த துப்பாக்கிப்பிரயோகம் செய்த வண்ணம் பணத்தைகொள்ளையடித்துக்கொண்டு வேறொரு வாகனத்தில் தப்பிச்சென்று விட்டதாக பொலிசார் தெரிவித்தனர்

கொள்ளைக் கோஷ்டியினர் இத்தொழிற்சாலையின் பிரதான வாசலின் நடைபாதையில் அங்காடி புடவை வியாபாரிகள் போல் நடித்துக் கொண்டிருந்ததாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தார்கள்.

கொள்ளையர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளான கிறிஸ்ரி பெரேராவும், எம் ஏ. சிறிசேனுவும் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள் மற்றும் ஐந்து பாதுகாப்பு ஊழியர்கள் படுகாயமடைந்தனர். (இ-வி)

### யாழ் நகரில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுமடம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கருகிலுள்ள வீட்டில்வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியில் வசிக்கும் செல்வி கவிதாஇராசரட்ணம் (16-வயது) என்பவர் பலியானுர்.

இச்சம்பவத்தில் வேலணையிலிருந்து இடம் பெயர்ந்த திருமதி மங்கையர்க்கரசி பத்திநாதர், இவரது குழந்தையான பத்திநாதர் கவாஸ்கர் (3-வயது), இராசரட்ணம் தயாளினி (11 வயது), இராசரட்ணம் சிறிவரதன் (24 வயது) இராசையா இராசகுலசிங்கம் (34 வயது) ஆகியோரும் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த குருசாமி இராசேஸ்வரி (19 வயது) என்ற இளம் யுவதியும் காயமடைந்தனர்.

ஐந்துநிமிட இடைவெளிக்குப் பின்னர் அராலி இராணுவ முகாமிலிருந்து படையினரால் அடுத்தத்து நான்கு ஷெல் தாக்குதல்கள் ஒட்டுமடம் பகுதியை நோக்கியே மேற்கொள்ளப்பட்டன.

4 ஷெல்களும் ஒட்டுமடம் குடியிருப்புக்கண்மையிலுள்ள வயற்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன வெடித்த சிதறல்களினுல் வீட்டிற்குள் இருந்த மக்கள் மேலும் சிறிய காயங்களுக்குளளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலினுல் மூன்று வீடுகள் சேதமடைந்தன. ஷெல் தாக்குதலையடுத்து அப்பகுதி மக்கள் அனைவரும் அகப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக வேறு இடம்நோக்கி சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது. (56-இ)

### புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றிலே அவர் இவ்வாறு கூறினுா.

நீண்ட நாட்களாகத் தொடரும் யுத்தத்தினுல் இப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் தேவையற்ற பொருளாதார அழிவும் உயிரழிவும ஏற்படுவதை நிறுத்த வேண்டுமானுல் உடனடியாக புலிகளுடன் பேசுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி)

### இன்று

(யாழ்ப்பாணம்]

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நிகழ்வாக திருமதி மனேன்மணி சண்முகதாஸ் (ஆய்வுப் பேராசிரியை-மொழியாய்வு நிறுவனம்- கச்சுயின் பல்கலைக்கழகம்-டோக்கியோ, யப்பான்) ''தமிழரின் மொழி, கலை, பண்பாடுகளுடன் யப்பானியர் கொண்டுள்ள இசைவாக்கம்- ஒருகள ஆய்வு'' என்னும் பொருள் பற்றி யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஓர் ஆய்வுப் பேரவை நிகழ்த்தவுள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8